# உங்கள் மெஷினைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்




வுநஒவஇந்த வீடியோவில் தையல் மிஷினைப் பற்றி அடிப்படை விவரங்களை தெரிந்து கொள்ளலாம். அவற்றை தெரிந்து கொண்ட பின்னர், உங்கள் தையல் திறமையை பிரயோகிக்கலாம்.



வுநஒவஆரம்பிக்கும் முன்பு ஊசியை எப்படி மாற்றுவது என்பதை தெரிந்து கொள்ளுங்கள். நிச்சயம் அதை தெரிந்து கொள்ளவேண்டும். காரணம் ஒவ்வொரு வகை தையலுக்கும் வெவ்வேறு வித ஊசிகளை பயன்படுத்த வேண்டி இருக்கும். அப்போது ஊசி உடைந்து போகும் வாய்ப்பு உண்டு. சாதாரண தையல் என்றாலும், தையல் சரியாக விழவில்லை என்றால் ஊசியை மாற்றுவது நல்லது.

இந்த எளிய முறைகளின் மூலம் ஊசியை மாற்றுவது எப்படி என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.
கடிகார மாற்று சுற்றின் மூலம் ஊசியின் பிடிமானத்தை தளர்த்தவும்.
ஊசியை வெளியே எடுத்தால் ஒரு பக்கம் தட்டையாகவும், மறுபக்கம் மேடு போன்றும் காணப்படும்.
மீண்டும் ஊசியை சொருக எடுத்த இடத்திலேயே ஊசியை கடைசி வரை உள்ளே செலுத்தவும்.
இவ்வாறு செலுத்தும் போது ஊசியின் தட்டை பாகம் நீடில் பாருக்குள் நுழைய வேண்டும்.
பிறகு க்ளாம்ப்பை டைட் செய்யவும்

அடுத்தது பாபினில் நூலை எப்படி சுற்றுவது என்று தெரிந்து கொள்ளுங்கள். இது மிகவும் முக்கியமானது. பலவிதமான துணிகளுக்கு அந்த அந்த நிறத்தில் நூல்களை உபயோகிக்கும் போது அடிக்கடி பாபினில் நூலை மாற்ற வேண்டி வரும்.



ஸ்பூல் ஹோல்டரை வெளியே எடுத்து நூல்கண்டை சொருகவும்.
எக்ஸ்டன்ஷன் டேபிளை வெளியே எடுக்கவும
மூடியை திறந்து பாபின் கேஸ்சை ஷட்டிலில் இருந்து அகற்றவும்
பாபின் கேஸ்சில் இருந்து பாபினை வெளியே எடுக்கவும்.
இப்போது மேலே இருக்கும் நூலை ஸ்பூலில் இருந்து த்ரெட் கைட் வழியாக இழுக்கவும்.
பாபினில் இருக்கும் சிறு துளை வழியே நூலை உள்ளில் இருந்து பாபினுக்கு வெளியே இழுத்துக் கொள்ளவும்.
இப்போது பாபினை ஒயின்டர் ஸ்பின்டிலில் நூலின் மறு நுனி மேல்பக்கம் வருமாறு பொறுத்திக் கொள்ளவும்.



இப்போது ஒயின்டர் ஸ்பின்டிலை வலது பக்கமா
தள்ளிக் கொள்ளவும்
பேலன்ஸ் வீலை மிஷினிலிருந்து வெளியே இழுத்துக் கொள்ளவும். இப்படி செய்வது மிஷினை இயக்காமல் பார்த்துக்கொள்ளும்.
பாபின் நூலை பிடித்துக் கொண்டு கால் பெடலை அழுத்தி மிஷினை இயக்கவும்.
இரண்டு அல்லது மூன்று சுற்று சுற்றியதும்
பாபினிலிருந்து வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் நூலை வெட்டி விடவும்.
பாபின் நிரம்பும் வரை மிஷினை ஓட்டவும். முழு சுற்றும் முடிந்ததும் ஒயின்டர் தானாகவே நின்று விடும்.
நூலை கத்தரித்து பாபின் ஹோல்டரை இடது புறம் தள்ளி விடவும். பிறகு பாபினை எடுத்துவிடவும்
பாபின் கேஸ்சில் கேபினை பொருத்தவும். இப்போது நூல் கடிகார மாற்று சுற்றாக டென்ஷன் ப்ளேட்டின் வழியாக வரும். சற்றே நூலை இழுத்து
பார்த்தால் இது புரியும்.
பாபின் க்ளட்ச் லீவரை பிடித்துக்கொண்டு ஷட்டில் அசெம்பிளியில் பாபின் கேஸ்சை சொருகவும்.
ஷட்டில் கவரை மூடவும்
எக்ஸ்டன்ஷன் டேபிளை பொருத்தவும்



நூலை இழுத்து வாங்கும் லீவரை நன்றாக மேலே தூக்கவும். இதற்கு பேலன்ஸ் வீலை உங்களை நோக்கி சுற்றிக் கொள்ளவும்.
நூலின் நுனியை மேல் இருக்கும் நூல் கைட் 1
வழியே எடுத்துக் கொள்ளவும்.
ஸ்பூலின் அருகில் இருக்கும் நூலை பிடித்துக்
கொள்ளும் போது அதன் நுனியை இரண்டாவது
பாயின்ட் வழியே அம்புக்குறிக்கு ஏற்ப ரு டர்ன் எடுத்து வரவும்.
அடுத்தது நூலை சீராக பிடித்து வலமிருந்து இடமாக லெவல் 3, பிறகு
லெவல் 4 ன் வழியாக கொண்டு வரவும்.
நீடில் பாருக்கு பின்னால் இடதுபுறம் இருக்கும் த்ரெட் கைட் 5 ன் வழியாக நூலை கொண்டு வர வேண்டும்.
ஊசி மேலே தூக்கி இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளவும்.






அதே போல் நீடில் த்ரெட்டும் கீழே இருக்கும் படி பார்த்துக் கொள்ளவும்
(இது சிறு பயிற்சிக்கு பிறகு பழகிவிடும்.)
இடது கையால் ஊசி வழியே வரும் நூலை பிடித்துக்கொண்டு
யனெ டழறநச வாந நெநனடந னை வாந நெநனடந
lடயவந டில வரசனைபெ வாந டியடயஉந றாநநட
பேலன்ஸ் வீலை உங்களை நோக்கி சுற்றிக்கொண்டு ஊசியை கீழே இறக்கி விட்டு நீடில் ப்ளேட் வழியாக நூலை ஊசி கொண்டு மேலே இழுக்க வேண்டும். இப்போது இரண்டு நூலையும் சேர்த்து பிடித்துக்கொண்டு ப்ரெஸ்சர் புட்க்கு  பின்னால் கொண்டு போக வேண்டும்.






கடைசியாக ஒரு முக்கியமான குறிப்பு. மிஷின் ஓடத் தொடங்கும் முன்

நூலின் டென்ஷன் சரியாக இருக்கிறதா என்று அடிக்கடி கண்காணிக்க வேண்டும். அப்போது தான் நூலில் முடிச்சி விழாமல் இருக்கும் அல்லது மிகவும் டைட்டாக இருந்தால் நூல் அறுந்து விடும்

நூலின் டென்ஷனை கட்டுப்படுத்தும் டயல் 0 லிருந்து 9 வரை உண்டு. பொதுவாக 3 என்பது சரியான டென்ஷனை கொடுக்கும்.




உங்கள் மிஷின் தைப்பதற்கு ரெடி ஆகி விட்டது. இப்போது பேட்டர்ன்னை செலக்ட் பண்ண வேண்டியது தான் உங்கள் உஷா ஜனோமி ஏகப்பட்ட உள்கட்டமைப்புடன் வருகிறது நீங்கள் வாங்கும் மாடலை பொறுத்து அவரை மாறுபடும். உதாரணத்திற்கு ஸிக்ஸேக் தையல் வேண்டுமென்றால் பேட்டர்ன் செலக்டர் டயலில் ஊ யை தேர்ந்தெடுக்கவும். தையலின் நீளத்தை தேவைக்கு ஏற்ப பொருத்த பொசிஷன் 2 ஐ செலக்ட் செய்தால் போதும்.

ஆகவே ஒரு சிறிய துணியை எடுத்து நிறைய தைத்துப் பாருங்கள் கூடிய சீக்கிரமே நீங்கள் ஒரு தையல்கலை வல்லுனர் ஆகிவிடுவீர்கள்!

